திகதி: 2022.05.07
இலக்கம்: 25

# ஊடக அறிவித்தல்
# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கணினி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட அவசர பழுதுபார்ப்பு நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கைகள், சாதாரண சேவையின் கீழ் (ஒரு நாள் சேவை தவிர்ந்த) மாத்திரம் மே மாதம் 09 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மே மாதம் 09 ஆம் திகதி திங்கட் கிழமை, மே மாதம் 05,06 மற்றும் 09 ஆம் திகதிகளில் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக நேரத்தை ஒதுக்கிக் கொண்ட மற்றும் மே மாதம் 05 ஆம் திகதி சாதாரண சேவையின் கீழ் விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு வருகைத்தந்த, திணைக்களத்தினால் இலக்கம் அல்லது திகதி முத்திரையைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும், மே மாதம் 10 ஆம் திகதி செவ்வாய் கிழமை முதல் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். http://www.immigration.gov.lk/ எனும் இணையத்தளத்திற்குப் பிரவேசித்து அல்லது 0707101060 எனும் தொலைப்பேசி இலக்கத்தை அழைத்து திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொள்ள முடியும்.

ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை வழங்கும் பொருட்டு கணினி முறைமையை சீரமைப்பதற்கு திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆளணியினர் தற்போது மும்முரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கூடிய விரைவில் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்திற்கு மனம் வருந்துவதோடு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள், பிராந்திய அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வுச் சேவைகள் என்பன வழமைப் போன்று நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**